Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# அரங்கக் கலை அன்றும் இன்றும்

44

**முனைவர் செ.கற்பகம் & ஷபின்பிரைட்**
**இசைத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர்**

**ஆய்வுச்சுருக்கம்**

அரங்கக் கலை அன்றும் இன்றும் என்னும் தலைப்பில் ஆராயப்பட்டிருக்கும் இந்த கட்டுரையானது அரங்கக்கலை வெவ்வேறு காலங்களில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை தெளிவுப்படுத்துகிறது. ஆரம்ப காலத்தில் எவ்விதம் இருந்தது என்றும், சோழர்களின் ஆட்சிக் காலத்தில்தான் அரங்கக் கலை என்ற பெயர் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது போன்ற செய்திகள் இக்கட்டுரையில் தெளிவுப் படுத்தப்பட்டுள்ளது. அரங்கம் எனப்படும் மேடையானது எந்தெந்த பெயர்களில் அழைக்கப்பட்டது என்றும், சங்க காலம், காப்பிய காலம், புராண காலம், பக்தி காலம் போன்ற வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்ட இலக்கியங்களின் மூலம் அரங்க கலையின் வேறு பெயர்களும் முக்கியத்துவமும் விளக்கப்பட்டுள்ளது. அரங்கம் அது எவ்விதம் அமையவேண்டும் என்பதற்கு தலை சிறந்த உதாரணம் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தின் அரங்க அமைதியாகும். அதுபோன்று சில நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அரங்க அமைப்புகளும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. எழுத்து வடிவில் காணப்படும் அந்த அரங்கங்கள் காட்சி வடிவில் காணக்கிடைப்பது இக்காலத்தில் தான். தென்னிந்தியாவில் புகழ்ப்பெற்ற சில அரங்கங்களைப் பற்றியும் அதன் கலைத் தொண்டு பற்றியும் அரங்கக்கலை தற்போது எவ்விதம் வளர்ச்சி பெற்றுள்ளது என்பது பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**ஆய்வு நோக்கம்**

முற்கால அரங்கக்கலையே இக்கால அரங்கக்கலையின் வளர்ச்சிக்கு ஓர் அடித்தளம் என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கம்.

**திறவுச்சொற்கள்**

அரங்கம், மண்டபம், நாடகச்சாலை, ஆடலரங்கம், ஒலி-ஒளியமைப்பு, திரைச்சீலை, தென்னிந்திய அரங்கு, நவீன அரங்கு.

**முன்னுரை**

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைவது பண்பாடு, கலாச்சாரம், கலைகள் ஆகும். ஆடல் அரங்குகளை நோக்கும்பொழுது நாட்டிய கலையானது சமயச் சடங்குகள் வழியாகவே வளர்ந்துள்ளதால் கோயில்களில் தான் அதிகமாக வளர்ந்துள்ளது. இக்கலைகள்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கோயிலின் பெரிய மண்டபங்களிலும்,இறைவன் திருமுன்பும் அரங்கேறியுள்ளது. 'சதிர்ச்சாலை' என்ற ஒரு சிறந்த நாட்டியத்திற்கு என்று அமைக்கப்பட்ட மண்டபமானது முதலாம் ராஜராஜன் ஆட்சிக்காலத்தில் இருந்ததாக அறியப்படுகிறது. இதுபோன்று சங்ககாலத்திலும், பக்தி காலத்திலும், புராண காலத்திலும் பல நூல்கள் வாயிலாகவும் அரங்கக் கலையானது எந்த அளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது மற்றும் வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை அறியமுடிகிறது. அக்கால அரங்கக் கலை எவ்விதம் இருந்தது மற்றும் இக்கால அரங்கக்கலை எவ்விதம் மாற்றமடைந்துள்ளது என்பதை தெளிவுபடுத்தும் நோக்கிலேயே இக்கட்டுரையானது ஆராயப்பட்டுள்ளது.

**அரங்கின் வகைகள்**

அரங்குகளானது ஆடரங்கு, பாடரங்கு, கருவிஇசை அரங்கு, வேத்தியல் அரங்கு, பொதுவியல் அரங்கு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன.[1] இப்பெயர்கள் நிகழ்த்துக் கலைகள் நடைபெறும் இடங்களை குறிப்பதாக அமைந்துள்ளது. இவற்றில் ஆடரங்கு என்பது ஆடல் நடைபெறும் மேடையினைக் குறிக்கும். ஆடுகளம், ஆடும்மேடை போன்ற பெயர்களும் உண்டு.[2]

**ஆடலரங்கின் வேறுபெயர்கள்**

ஆடகச்சாலை, ஆடலிடம்[3], நாடகச்சாலை, நடனசபை, நாட்டிய மண்டபம், நிருத்த மண்டபம், களம் போன்ற பல்வேறு பெயர்களால் அரங்கமானது குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்குறிப்பிட்ட பெயர்களில் ஆடகச்சாலை என்பது நாடகம், கூத்து, நடனம் முதலிய பிரம்மாண்டமான படைப்புகள் நிகழ்த்தும் பெரிய அரங்கம் எனப்படுகிறது. நாட்டிய மண்டபம், நிருத்த மண்டபம் போன்றவை நல்ல நாள், நல்ல நேரம், குற்றமற்ற இடம் போன்ற பல்வேறு வகைகளில் மிக நேர்த்தியாகத் திட்டமிட்டு கட்டப்பட்ட அரங்கம் எனப்படுகிறது.

**தமிழ் இலக்கியங்கள் காட்டும் அரங்கம்**

தமிழ் இலக்கியங்களில் அரங்குப் பற்றிய பல பதிவுகள் இடம்பெற்றுள்ளன.அவற்றுள் ஒரு சிலவற்றை இங்கு காண்போம்.

**புராணக்கால ஆடலரங்கு**

இராமாயணத்தில் வரும் பாலகாண்டம் நகரப்படலம் 154-வது பாடலில் அரங்கம் அதாவது மண்டபம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. நடனத்திற்கு என்று தனி மண்டபம் அமைந்திருந்ததாக அதன் மூலம் அறிய முடிகிறது.

**"அன்னமென் னடையவ ராடு மண்டபம்"[4]**

**சங்க காலத்தில் ஆடலரங்கு**

ஆடல் அரங்கு பற்றிய செய்திகள் சங்க காலத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. அந்த செய்திகள் சங்க இலக்கியங்களின் மூலம் நன்கு தெளிவாகிறது.

**"நனவே களனும் அகலமுஞ் செய்யும்"** [5]

எனும் பாடல் வரியின் மூலம் ஆடலரங்கானது நனவு,களன் என்னும் பெயர்களில்



Tamil University Thanjavur
Department of Music
International Conference
"SIGNIFICANCE OF MUSIC,DANCE AND CULTURE THROUGH HISTORY"
"வரலாற்றுச் சுவடில் இசை, நடனம் மற்றும் கலாச்சாரத்தின் முக்கியத்துவம்"
Pranav Journal of Fine arts
பிரணவ் நுண்கலை ஆய்விதழ்
volume:1 Issue:4 March 2023
ISSN:2582-9513

அழைக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

**"கூத்தாட்டவைக் குழாத் தற்றே பெருஞ்செல்வம்**

**போக்கும் அதுவிளிந் தற்று"** [6]

என்ற குறளின் மூலம் வள்ளுவர், நாடெங்கும் கூத்துக்கள் நடைபெறுவதையும், அதற்கென்று அரங்குகள், அந்த கூத்துக்களைக்காண மக்கள் பலரும் வருவதாகவும், கண்டு களித்து விட்டு கலைந்து செல்வதாகவும் திருக்குறளின் மூலம் அறிய முடிகின்றது. இது போன்று பல சங்க இலக்கியங்களில் ஆடல் அரங்கம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

**காப்பியங்களில் ஆடலரங்கு**

காப்பியங்களில் தலைசிறந்த காப்பியமாக விளங்குவது சிலப்பதிகாரம் ஆகும். நடனம் பற்றிய ஏராளமான செய்திகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். சிலப்பதிகாரத்தில் பக்க இசைக் குழுவினருக்கு எத்தகைய தகுதிகள் இருக்கவேண்டும் என்பது பற்றி மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அதுபோன்றே ஓர் அரங்கத்தின் அமைதி எவ்விதம் இருக்க வேண்டும் என்பது பற்றி மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் உரையில் இதற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

**“எண்ணிய நூலோர் இயல்பினில்**

**---------------------------------------------------------**

**வியந்து படக் கிடந்த அருந்தொழில் அரங்கத்து”**[7]

என்ற பாடல் மூலம் ஓர் அரங்கம் அமைக்க இடத்தேர்வு, மண்ணகம் தேர்வு, அளவுகோல், அரங்க அளவுமுறை, அரங்க அமைப்பு, இரண்டு வாயில்கள், பூதர் ஓவியம், மாண் விளக்கு, மூவகை எழினிகள்,ஓவிய விதானம் போன்றவை பற்றி விளக்கப்பட்டுள்ளது.

**பக்தி காலத்தில் ஆடலரங்கு**

பக்தி காலத்தில் தேவார மூவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் இயற்றிய பாடல்களில் 'ஆடகச்சாலை' என்ற பெயர் காணப்படுகிறது.

**"காந்தார இசையமைத்துக் காரிகையார் பண்பாடக் கவினார் வீதி தேந்தே மென்று அரங்கேறிக் சேயிழையார் நடமாடும்."** [8]

போன்ற பாடல்களிலும் அரங்கம் பற்றிய செய்தி காணப்படுகின்றன.

**கல்வெட்டு வழி ஆடல் அரங்கம்**

சோழர்களின் காலத்தில் தான் நாட்டியம் நடைபெறும் இடங்களை 'அரங்குகள்' என்று அழைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. முக்கியமாக கல்வெட்டுகள் வழி அரங்குகளானது நாடகச்சாலைகள், திருவரங்குகள், நாட்டிய மண்டபம், நர்த்தன மண்டபம், நானாவித நாடகச்சாலை, இராஜராஜன் மண்டபம், நிருத்த மண்டபம் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு நடனமாதர்கள் தனது நாட்டியக்கலை

திறனை வெளிப்படுத்தி உள்ளமையை பல்வேறு கல்வெட்டுகளின் மூலம் அறிய முடிகின்றது.

**நாட்டிய நூல்கள் குறிப்பிடும் ஆடலரங்கம்**

புகழ்பெற்ற நாட்டிய நூல்களான பரத சங்கிரகம், மகாபாரத சூடாமணி,அபிநயதர்ப்பணம்,நாட்டியசாஸ்திரம்,ரஸமஞ்சரி,பரதசேனாபதீயம் போன்ற பல நூல்களில் அரங்கம் பற்றி விளக்கப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றை பின்வருமாறு காணலாம்.

**நாட்டிய சாஸ்திர ஆடலரங்கு**

நாட்டிய சாஸ்திரம் அரங்கினை. விகிருஷ்டம், சதுரச்ரம்,திரியச்ரம் என்ற மூன்றாகப் பிரித்து விளக்குகிறது. இவற்றில் நீளம் அதிகமாக அகலம் குறைவாக உள்ளது விகிருஷ்ட நாட்டிய மண்டபம் என்றும், நீளமும் அகலமும் சரி சமமாக உள்ளது சதுரச்ர நாட்டிய மண்டபம் என்றும், முக்கோண வடிவில் மூன்று பக்கமும் சமமான அளவு உடையது திரியச்ர நாட்டிய மண்டபம் என்றும் வவிளக்கப்பட்டுள்ளது.[9] முக்கியமாக இந்த நாட்டிய மண்டபம் கட்டுவதற்கான விதிமுறைகளும் விவரங்களும் மிகத்தெளிவாக நேர்த்தியாக இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அபிநய தர்ப்பணம் கூறும் ஆடலரங்கு**

அரங்கத்தின் வடக்கு முகத்திலோ அல்லது இடது முகத்திலோ சிம்மாசனத்தின் மீது சபாபதி அமர்ந்திருக்க, சபாபதியின் தேவி நகை அலங்காரங்களுடன் இடப்புறம் அமர்ந்திருக்க, வலப்பக்கத்தில் அமைச்சரும் இரு பக்கங்களில் கவிஞர்களும் இருக்க, மற்ற அரசர்கள் நின்று இருத்தலே சபா மண்டபத்தின் சீராகும் என்று நந்திகேஸ்வரர் குறிப்பிடுகிறார்.[10]

**அன்று- ஒளி ஒலி திரைச்சீலை**

அக்காலத்தில் ஒலிப்பெருக்கி போன்ற தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத காரணத்தினால் கலைஞர்கள் தாங்களே சத்தமாகப் பாடிக் கொண்டும், பேசிக் கொண்டும் நடித்துள்ளதாக அறியப்படுகிறது. கலைஞர்களின் பாடலும் பேசும் வார்த்தைகளும் நன்கு சபையில் உள்ள அனைவருக்கும் கேட்கும் வகையில் அரங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. சில நிகழ்ச்சிகள் திறந்தவெளி அரங்கில் நிகழ்ந்ததாகவும் காணப்படுகிறது. நாட்டிய நிகழ்ச்சிகள் பெரும்பாலும் மாலை வேளையில் நடைபெறுவதால் கலைஞர்கள் அபிநயிக்கும் அபிநயம் நன்கு அனைவருக்கும் தெரியுமாறு எண்ணெய் விளக்குகளையே அதிகம் உபயோகித்துள்ளனர். மேடையில் தோன்றும் கலைஞரின் முன்பு ஒரு பெரிய விளக்கு வைக்கப்பட்டிருக்கும். அந்த விளக்கின் பிரகாசமே அந்த அரங்கத்திற்கு போதுமானதாக இருக்கும்.இந்த முறையானது தற்காலத்தில் கேரள செவ்வியல் நடனமான கதகளியில் இன்றும் பின்பற்றப்படுகிறது.

பிற்காலத்தில் மஞ்சள் நிற மின்சார விளக்குகளைப் பயன்படுத்தியுள்ளனர். திரைச்சீலைகள் மேலிருந்து கீழ் வரும் திரைச்சீலை, இரண்டாகப் பிரியும் திரைச் சீலையும், மேடையின் ஓரங்களில் மேலிருந்து கீழ் சிறிய சிறிய திரைச்சீலைகள் உள்ளே நிற்கும் கலைஞர்கள் வெளியே தெரியாத அளவிற்கு தொங்கவிடப்பட்டிருக்கும். இந்த திரைச்சீலைகளை ஒருமுகஎழினி,பொருமுகஎழினி,கரந்துவரல் எழினி என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்

பட்டிருப்பதைக் காணலாம்.

**"ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்**
**கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வகுத்து"**[11]

**இக்கால ஆடல் அரங்கு**

இக்காலத்தில் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது மிகப்பெரிய அளவில் உயர்ந்து விட்டதால் இக்கால அரங்குகள் நவீன அரங்குகளாகவே காணப்படுகின்றன. சில அரங்கங்கள் ஆடல் பாடல் போன்ற நிகழ்த்துக் கலைகளுக்காகவே அமைக்கப்பட்ட அரங்கங்களும் தென்னிந்தியாவில் காணப்படுகின்றன. அந்த அரங்குகளில் ஒளிவிளக்குகள், திரைச்சீலைகள், ஒலிபெருக்கிகள் போன்றவை தற்காலிகமாக அல்லாமல் நிரந்தரமாகவே பொருத்தப்பட்டிருக்கும். திரையரங்குகள் எவ்வாறு நேர்த்தியாக அமைக்கப்பட்டிருக்குமோ அதுபோன்றே ஆடல் அரங்குகளும் மிக நேர்த்தியாக அமைந்திருக்கும்.

மேடையில் குழுவாக நடனம் செய்யும் பொழுது ஒருவரை மட்டும் தனியாக எடுத்துக் காட்டும் அளவுக்கு ஸ்பாட்லைட் (Spot light) எனப்படும் ஒளி விளக்குகளும், சற்று தூரத்தில் இருந்து பார்க்கான் (parcan) எனப்படும் ஒளி விளக்குகள் பயன்படுத்தும் போது மேடையில் அபிநயிப்பவர்களின் உடல் நிறத்திற்கு ஏற்ப அவர்களை மிகத் தெளிவாக எடுத்துக்காட்ட இது பயன்படுகிறது. வெவ்வேறு நிறங்களிலும் காணப்படுகிறது. எல்.ஈ.டி ( LED) விளக்குகள் மேடையில் பின்புறம் அமைப்பதன் மூலம் அந்தந்த சூழ்நிலைக்கேற்ப காட்சிகளையும் நன்கு வெளிக்காட்ட முடிகிறது. Fog Machine என்ற கருவியின் மூலம் புகையை செயற்கையாக உருவாக்கப் படுகிறது. இதில் ஃபாக் ஜூஸ் என்ற திரவம் பயன்படுத்தப்படுவதால் அது வெளிக்காற்றுடன் கலந்ததும் புகை மண்டலமாக மாறுகிறது. இது தேவலோகம் போன்ற காட்சிகளை தத்ரூபமாக காட்டுவதற்கும் வெவ்வேறு நிறங்களுடன் கூடிய விளக்குகளுடன் கலக்கும்போது பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் கண்களுக்கு விருந்தாகவும் அமைகின்றது.

**புகழ்பெற்ற சில தென்னிந்திய ஆடல் அரங்குகள்**

சென்னையில் பிரம்ம கான சபா, பாரதிய வித்யா பவன், ரசிக ரஞ்சனி சபா சங்கீத வித்வத்சபை, கிருஷ்ணகான சபா, நாரதகான சபா, கலாஷேத்ராவின் ருக்மணி அரங்கம், தஞ்சை சங்கீத மஹால், திருச்சி ரசிக ரஞ்சனி சபா போன்ற பல நவீன அரங்குகள் காணப்படுகின்றன.அவற்றில் சில முக்கிய அரங்குகள் பற்றி காணலாம்.

**சங்கீத வித்வத் சபை**

1928ல் தோன்றியது இந்த சங்கீத வித்வத் சபை. இந்த சபை தோன்றுவதற்கு சுதந்திரப் போராட்ட வீரர்களான சத்தியமூர்த்தி, திரு.யூ. ராமாராவ் போன்றவர்கள் காரணமாக இருந்தனர். 1933 இல் இருந்து சங்கீத வித்வத் சபை பலவகையான உயர்ந்த விருதுகளை மிகச் சிறந்த கலைஞர்களுக்கு வழங்கி வருகிறது. இந்த சபை ஓர் இசை கல்லூரியையும் நடத்தி வருகிறது. சங்கீத வித்வத் சபையின் நிகழ்வுகளை கண்டு வெளிநாட்டிலும் சிலர் நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்த

ஆரம்பித்துள்ளனர். வருடாந்திர இசை நாட்டிய மாநாடு, இசை நாட்டிய விழாக்கள், அறக்கட்டளை நிகழ்வுகள், HCL concert Series, Spirit of youth Music and dance festival, Radel-mid year concerts and dance festival, பக்தி இசைப்போட்டிகள் போன்ற நிகழ்வுகளை மிக நேர்த்தியாகப் பல வருடங்களாக நிகழ்த்தி வருகிறது.[13] ஆரம்ப காலத்தில் சிறிய கட்டிடங்களாக இருந்து தற்பொழுது ஓர் உயர்ந்த அயல்நாட்டு அரங்கம் போன்ற வடிவில் சங்கீத வித்வத் சபையில் அரங்கமானது காட்சியளிக்கிறது. சுமார் ஆயிரம் பேர் அமரும் அளவுக்கு பெரிய அரங்கமும் சிறிய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான சிறிய அரங்கமும் காணப்படுகிறது. கிருஷ்ணமாச்சாரி ஆடிடோரியம் என்று பெரிய அரங்கமும், கஸ்தூரி சீனிவாசன் ஹால் என்று சிறிய அரங்கமும் அழைக்கப்படுகிறது. மார்கழி மாதம் நடைபெறும் இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளைக் காண தமிழ்நாட்டை விட வெளிநாட்டவர்கள் வந்து இதைக் கண்டு களிப்பது மேலும் வியக்கத் தக்கதாகும். உலகின் எத்தனை மேடைகளில் நாட்டிய நிகழ்ச்சிகள் செய்தாலும் சென்னை சங்கீத வித்வத் சபையில் நிகழ்ச்சிகள் செய்வது கலைஞர்களுக்கு ஒரு பெருமையான விஷயமாகவே கருதப்படுகிறது. சங்கீத வித்வத் சபையில் புகழ்பெற்ற நாட்டிய சகோதரிகளான திருவாழப்புத்தூர் ராஜலட்சுமி, ஜீவரத்தினம் இவர்களின் நாட்டிய கச்சேரியே முதன்முதலில் அரங்கேறியது. மேலும் ருக்மணிதேவி அருண்டேல் இவர்களின் நடனத்தை கண்டு தான் முதன்முதலில் பேருவகை கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.[14]

**கிருஷ்ணகான சபா**

1953ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு சபாவாகும். நம் கலாச்சாரத்தை பாதுகாக்கும் நோக்கில், தொடங்கப்பட்ட காலம் முதல் தற்போது வரை நாட்டியம், இசைச்சொற்பொழிவுகளை நடத்தி வருகிறது. NKC என்று அழைக்கப்படும் நாட்டியக்கலை மாநாட்டை பல ஆண்டுகளாக நடத்தி வருகிறது.[15] இந்த கிருஷ்ண கான சபாவில் இரண்டு மண்டபங்கள் அமைந்துள்ளன. சிறிய அரங்கம் 'காமகோடி கான மந்திர்' என்ற பெயரிலும், பெரிய அரங்கம் 'டாக்டர் நல்லி கானவிஹார்' என்ற பெயரிலும் அமைந்துள்ளது. மேடையின் வலப்புறம் ஒளி, ஒலிகளை இயக்குபவரின் அறை அமைந்திருக்கும். அந்த அறையிலிருந்து அரங்கத்தைப் பார்ப்பது போன்ற கண்ணாடி அமைந்திருக்கும். அதன் மூலம் அவர் ஒலி மற்றும் ஒளியை இயக்குவார். இந்த சபாவானது முற்றிலும் ஒரு பாரம்பரியத்தை தழுவியதாக அமைந்திருக்கும். இரு அரங்குகளிலும் மூங்கில் குச்சிகளால் ஆன இருக்கைகளுடன் புறத்தே பச்சைப்பசேல் போன்ற தோற்றத்துடன் நேர்த்தியாக அமைந்திருக்கும். பெயருக்கேற்றவாறு கிருஷ்ணரது உருவச்சிலைகள் எங்கும் வித்தியாசமாக அமைந்திருக்கும்.

**நாரத கான சபா**

இந்த சபா 1958ல் தொடங்கப்பட்டதாகும். ஆரம்பத்தில் மயிலாப்பூரில் தொடங்கப்பட்டு பின்பு 1972ல் சங்கீத வித்வத் சபை அரங்கிலேயே நாரதகான சபாவும் செயல்பட்டு, பின்பு 1888ல் சொந்தமாக ஓர் அரங்கத்தில் அமைத்து செயல்பட தொடங்கியது. இந்த சபா பல்வேறு வகையான

நிகழ்வுகளை வருடம் முழுவதும் நடத்தி வருகிறது.[16] 1997 முதல் சில தலைப்புகளின் அடிப்படையில் கோயில்கள், காவியங்கள் போன்ற வெவ்வேறு கருத்துக்களை மையமாகக் கொண்ட நாட்டிய நிகழ்ச்சிகளைத் தகுந்த நாட்டியக் கலைஞர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு வாய்ப்பளித்து நாட்டியக் கலையும் பாரம்பரியத்தையும் வெவ்வேறு முறையில் வளர்த்து வருகிறது.

மாதாந்திர நாட்டிய நிகழ்வுகள்,பூரணமார்கம், நாட்டியச் சொற்பொழிவுகள் போன்ற இன்னும் பல நிகழ்வுகளை நிகழ்த்தி வருகிறது. சுமார் 1500 பேருக்கு மேல் இருந்து நிகழ்வுகளைக் காணும் அளவுக்கு பிரம்மாண்டமான பெரிய அரங்கமும், சிறிய நிகழ்வுகள் நடத்துவதற்கானச் சிற்றரங்கமும் காணப்படுகிறது. நாட்டியாரங்கம் என்ற பெயரில் இயங்கி வரும் இந்த சபாவில் 'சத்குரு ஞானானந்தா ஹால்' என்ற பெயரில் பெரிய அரங்கமும், 'சுவாமி ஹரிதாஸ் கிரி ஹால்' என்ற பெயரில் சிறிய அரங்கமும் அழைக்கப்படுகிறது.[17] இதன் பெரிய அரங்கமானது தியேட்டர்களைப் போன்ற அரங்கமாகக் காணப்படுவதால் நிகழ்வுகளைக் காண எவ்வித இடையூறுமின்றி அமைகிறது.

**நவீனகால அரங்கம்**

இக்கால அரங்கங்களில் குறிப்பாக ஒப்பனை அறைகள் மிகச் சிறப்பாக அழகிய பெரிய கண்ணாடிகளுடன் சிறிய மஞ்சள் நிற ஒளி தரக்கூடிய விளக்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டிய கலைஞர்கள் மேடைக்கு எளிதில் செல்ல ஏதுவாக மேடையை ஒட்டியே ஒப்பனை அறை அமைந்துள்ளது. பெரும்பான்மையான அரங்கங்களில் குளிரூட்டி வசதிகள் செய்யப்பட்டுள்ளது. நாட்டிய நாடகங்களுக்கு மையமாக அமைவதே ஒளிவிளக்குகள் தான். அந்த வகையில் அந்த சூழ்நிலைக்கு ஏற்ற ஒளிவிளக்குகள் சிறந்த முறையில் அரங்கங்களில் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் அனைத்து அரங்குகளிலும் அதற்கென்று தனியான தொழில்நுட்பவியலாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**முடிவுரை**

அரங்க கலையானது பண்டைய காலத்திலும் தற்காலத்திலும் கலைகளின் வளர்ச்சிக்கு பெரும் துணைப் புரிந்து வருகின்றது. பழங்காலத்தில் இயற்கை அரங்குகளும், செயற்கை அரங்குகளும் கலைகளை வளர்த்து வந்தன. சிலப்பதிகார காலத்தில் தான் முதன் முதலில் அரங்கத்தின் அமைப்புகள் கூறப்பட்டுள்ளன. பின்னர் பக்தி காலங்களிலும், மன்னர்கள் காலத்திலும் கோயில்கள் நாடகச்சாலைகளாக செயல்பட்டன. தற்காலத்தில் நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு சென்னை போன்ற பெருநகரங்களில் பல்வேறு அரங்குகள் முறையாக வடிவமைக்கப்பட்டு நேர்த்தியாக இக்கலைகள் நடந்து வருகின்றன. நடன அரங்கமானது ஒரு குறிப்பிட்ட வரைமுறை உடன் இருந்தால் தான் நிகழ்ச்சியானது வெற்றியடையும். அதனால் நடனம் மற்றும் இசைக்கலை வளர்ச்சிக்கு அரங்கங்களில் பங்களிப்பானது அன்றும் இன்றும்

தொடர்ந்து வருகின்றது.

**சான்றாதாரங்கள்**

1.வீ.பா.கா.சுந்தரம்,தமிழிசைக்கலைக்களஞ்சியம், (முதல்தொகுதி-அ-ஔ),பாரதிதாசன் பல்கலைக்கழகம்,திருச்சி,1992, ப.53

2.P.Sambamurthy, A Dictionary of South Indian music and musicians Vol.III, (L-N),Indian Music publishing house,Madras.P.129.

3.Ibid,P.107

4.கம்பர், இராமாயணம்,பாலகாண்டம்(முதற்பகுதி)ரா.பி.சேதுப்பிள்ளை, பதிப்பாசிரியர் குழுத் தலைவர், அண்ணாமலை பல்கலைக்கழகம்,1959 ப.172-173

5.தொல்காப்பியம்,சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி ஏப்ரல் 1923
பக்.196,197

6.ஆறு.அழகப்பன் தமிழ் நாடகம் தோற்றமும், வளர்ச்சியும், அண்ணாமலை பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்,1987 ப.73

7.சண்முகசெல்வகணபதி மற்றும் செ.கற்பகம், சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையும் இசை நாட்டியக் கலைச்சொற்களும்,வெளியீடு- பழனி ஆதீனம், நவம்பர்-2015,ப.78

8. .வீ.பா.கா.சுந்தரம்,தமிழிசைக்கலைக்களஞ்சியம், முதல்தொகுதி, ப.107

9. தமிழாக்கம் எஸ்.என். ஸ்ரீராமதேசிகன் பரதநாட்டிய சாஸ்திரம்,முதற் பதிப்பு 2001, பதிப்பகம் உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,ப.9

10. நந்திகேசுவரர் இயற்றிய அபிநயதர்ப்பணம், வீரராகவன் தமிழ் மொழிபெயர்ப்பு, டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை-20,முதற்பதிப்பு-1957, ப.5

11. சண்முகசெல்வகணபதி மற்றும் செ.கற்பகம், சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையும் இசை நாட்டியக் கலைச்சொற்களும்,வெளியீடு- பழனி ஆதீனம், நவம்பர்-2015,ப.85

12. Fog Machine- Wikipedia

13. Madras Music Academy- Wikipedia

14. பி.எம். சுந்தரம், மரபு தந்த மாணிக்கங்கள், நூல் வெளியீடு டாக்டர். வே.ராகவன் நிகழ்கலைகள் மையம், அடையாறு, சென்னை-20 ,பக். 190,191

15. Krishna Gana Sabha- Wikipedia

16. Narada gana sabha- Wikipedia

17. Narada gana sabha- website